பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 11 2024 6 45

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தமிழகம் வருகிறார்.
2. நாட்டின் ஒவ்வொரு குடிமக்களும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற ஒற்றை இலக்கை நோக்கி செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்று புயலாக வலுப்பெறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
4. கனமழையைத் தொடர்ந்து மாநிலத்தில் 15 மாவட்டங்களில் இன்று கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
5. இத்தாலியில் நடைபெற்ற எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான கேடட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divith reddy** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தமிழகம் வருகிறார்.

இன்று இரவு கோவைக்கு வரும் குடியரசுத் தலைவர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் உதகமண்டலம் செல்கிறார்.

குன்னூர் வெலிங்டனில் உள்ள ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் நாளை அவர் கலந்து கொள்கிறார்.

நாளை மறுநாள் பழங்குடியின மக்களிடையே கலந்துரையாடும் குடியரசுத் தலைவர், மகளிர் சுய உதவிக்குழுவினரையும் சந்தித்து பேசுகிறார்.

வரும் சனிக்கிழமை கோயம்புத்தூர் செல்லும் குடியரசுத் தலைவர், அங்கிருந்து திருவாரூர் செல்கிறார்.

அங்குள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கவுள்ளார்.

குடியரசுத் தலைவரை வரவேற்பதற்காக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி நேற்று இரவு கோவை சென்றடைந்தார்.

குடியரசுத் தலைவரின் வருகையையொட்டி கோவை நீலகிரி மாவட்டங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் ஒவ்வொரு குடிமக்களும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற ஒற்றை இலக்கை நோக்கி செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் சாசன கொண்டாட்டங்களில் பங்கேற்று பேசிய அவர், நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கான வழிகாட்டியாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று கூறினார்.

கடந்த 75 ஆண்டுகளில் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளக்கூடிய வழிமுறைகளை அரசியல் சாசனம் ஏற்படுத்தியதன் மூலம் சரியான பாதையில் அரசு சென்று கொண்டிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

நெருக்கடி நிலை காலத்திலும் அரசியல் சாசனம் பல சவால்களை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்ட அவர், ஜம்மு-கஷ்மீரில் தற்போது அரசியல் சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் உருவாகி உள்ளது என்று கூறினார்,

நாட்டு மக்களின் வாழ்க்கை முறையை எளிதாக்குவதை உறுதி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் முறையில் ஓய்வூதிய சான்றிதழ்களை வழங்கும் நடைமுறையால் ஒன்றரை கோடி மூத்த குடிமக்கள் பயனடைந்திருப்பதாக அவர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பிற்கு சவாலாக திகழும் எந்த ஒரு பயங்கரவாத அமைப்புக்கும் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் சாசன நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்த அனைவருக்கும் தாம் தலைவணங்குவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் நடப்பு ஆண்டிற்கான இந்திய நீதித்துறையின் ஆண்டு அறிக்கையையும் பிரதமர் வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

ஓய்வூதிதாரர்கள் மற்றும் மூத்த குடிமக்களின் வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் தொடங்கப்பட்டு இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் அதனை சமர்ப்பித்துள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மூத்த குடிமக்களின் வாழ்க்கை நிலையை எளிதாக்கும் நோக்கில் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை பிரதமர் திரு நரேந்திரமோடி அறிமுகப்படுத்தியதாகக் கூறினார்.

நாடு முழுவதும் 800 நகரங்களில் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பிரச்சார இயக்கம் இம்மாதம் ஒன்றாம் தேதி தொடங்கப்பட்டதை திரு ஜிதேநதிரசிங் சுட்டிக்காட்டினார்.

இந்த டிஜிட்டல் சான்றிதழ் நடைமுறை தங்களுக்கு பெரும் பயனுள்ளதாக இருப்பதாகவும், காலதாமதமின்றி ஓய்வூதியம் கிடைப்பதாகவும் சேலம் மாவட்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) ---30 செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று புயலாக வலுப்பெறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேலும் வலுவடைந்து அடுத்த இரண்டு நாட்களில தமிழகம் மற்றும் இலங்கை கடற்கரையை நோக்கி நகரும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நாகப்பட்டினத்திலிருந்து 470 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து 670 கிலோமீட்டர் தென்கிழக்கு திசையிலும் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் நிலை கொண்டிருப்பதாக அது தெரிவித்துள்ளது.

இது மணிக்கு பத்து கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் கனமழையும், திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக சென்னை, திருவள்ளுர் உள்ளிட்ட வடகடலோர மாவட்டங்களுக்கு கன மழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கையும், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

குமரி கடல் தொடங்கி தமிழக கடலோர மாவட்டங்களைச் சோந்த மீனவர்கள் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக கனமழை பெய்துள்ளது.,

இந்நிலையில் கனமழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர் மாவட்டங்களில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம், திருவள்ளூர், திருவாரூர், தஞ்சை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், ராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாகை மாவட்டத்தில் நேற்று முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

மழை நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) ---- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் எந்த அளவு மழை பெய்தாலும் தண்ணீர் தேங்காமல் இருக்க அனைத்து முன்னேற்பாட்டு பணிகளையும் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

கன மழை எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ள நீர் வெளியேற்றும் பணிகளை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

அரும்பாக்கம், கோடம்பாக்கம், ஓட்டேரி, திரு வி க நகர் உள்ளிட்ட இடங்களில் இணைப்புக் கால்வாய்களில் மழைநீர் தடையின்றி செல்வதையும் திரு உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

**[]<<<>>>[]**

உணவு பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உலகளாவிய உணவு வார திருவிழா அபுதாபியில் தொடங்கியுள்ளது.

**[]<<<>>>[]**

லெபனானுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

குழந்தை திருமணம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேசிய பிரச்சார இயக்கத்திற்கான இணையதளத்தை மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்

**[]<<<>>>[]**

உத்திரபிரதேசத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மகா கும்பமேளாவில் தீயணைப்புப் பணியில் முதல் முறையாக ரோபோக்கள் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மணிப்பூரில் அண்மையில் நிகழ்ந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பான மூன்று வழக்குகள் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணையை தொடங்கியுள்ளது.

**[]<<<>>>[]**

நாகாலாந்தில் **Hornbill** மதிருவிழாவையொட்டி மொபைல் செயலி உள்ளிட்ட வசதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு **Neiphiu rio** - நேற்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை ஆட்சியர் திரு சிம்ரன் ஜித் சிங் காலோன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்ட அளவிலான சாலை பாதுகாப்பு குறித்து ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மாநில தகவல் ஆணையர் திருமதி பிரியகுமார் தலைமையில் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்கள் மீனதான விசாரணை நடைபெற்றது.

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாம் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு பிரபு சங்கர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இத்தாலியில் நடைபெற்ற எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான கேடட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divith reddy** என்ற சிறுவன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

அவர் சக வீரரான சாத்விக் ஸ்வெய்னை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். சாத்விக்குக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி மாலை மணி 4-45-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற தில்லி – பாட்னா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

மற்றொரு ஆட்டத்தில் தமிழ்நாடு அணி – உத்திரபிரதேச அணியை 40-26 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஹரியானா – புனே அணியையும், பெங்கால் - குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற மல்யுத்த வீரர் பஜ்ரங் பூனியா நான்கு ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்பதற்கு தடைவிதித்து தேசிய போதைப்பொருள் தடுப்பு அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

தேசிய அணி தேர்வின்போது போதைப்பொருள் தடுப்பு சோதனைக்கு ரத்த மாதிரியை வழங்க அவர் மறுத்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

***End of News***